சார்பு நீதிமன்றம், இலால்குடி.

OS.No.41/2018

2026ம் ஆண்டு ஜுன் 2-ம் நாள் செவ்வாய்கிழமை PW1 சாட்சியான வாக்குமூலம் 1969 ஆம் ஆண்டு 54 வது விதி 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி திரு.P.சக்திவேல், Gr-II Bench Clerk அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

பெயர் - சங்கிலி
த/பெ - நல்லையன்
வயது - 64

<u>**முதல் விசாரணை**</u>

நான் வழக்கின் வாதி. வாதி தரப்பு 1 ஆம் சாட்சி. எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனக்கு எழுத படிக்க தெரியாது, படிக்க கேட்டு புரிந்து கொண்ட பின்பு கையொப்பம் செய்துள்ளேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் உண்மையானவை. 24.09.1973 ஆம் தேதியிட்ட பதிவு அனுபோக போக்கிய பத்திரம் சார்பதிவு நகல் **வா.சா.ஆ.1**. தாவா சொத்தை காட்டக்கூடிய மாதிரி வரைபடம் அசல் **வா.சா.ஆ.2**. இ.ம.எண்.450/2004 in அ.வ.எண். 419/2004 மனுவின் உத்தரவு சான்று நகல் **வா.சா.ஆ.3**. வாதி திருச்சி, காவல்துறை கண்காணிப்பாளருக்கு அனுப்பிய 15.06.2010 ஆம் தேதியிட்ட மனு கையிருப்பு நகல் மற்றும் அஞ்சலக ரசீது அசல் **வா.சா.ஆ.4**. வாதி இலால்குடி, காவல்துறை துணை கண்காணிப்பாளர் அனுப்பிய 15.06.2010 ஆம் தேதியிட்ட மனு கையிருப்பு நகல் மற்றும் அஞ்சலக ரசீது அசல் **வா.சா.ஆ.5**. வாதி திருச்சி, மாவட்ட ஆட்சி தலைவருக்கு அனுப்பிய 15.06.2010 ஆம் தேதியிட்ட மனு கையிருப்பு நகல் மற்றும் அஞ்சலக ரசீது அசல் **வா.சா.ஆ.6**. திருச்சி, மாவட்ட காவல் கண்காணிப்பளார், இலால்குடி, காவல்துணை கண்காணிப்பாளர் மேற்படி மனுவினை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டைகள் ( எண்ணிக்கை 2) அசல் **வா.சா.ஆ.7**.

**முு.வி - தொடர்ச்சி** - ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக வழக்கறிஞர் வேண்டுகோளின்பேரில் மறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

/ signed/
சங்கிலி

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார

sd/-Tmt.R.Mohana.,B.L.,
சார்பு நீதிபதி
இலால்குடி